**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04-ம் நாள் சனிக்கிழமை

**IA NO.660/2022**

**In**

**O.S No.136/2018**

முத்துவேலு ........**மனுதாரர்/வாதி**

**//எதிர்//**

1. சின்னப்பா,

2. ஜீவானந்தம்,

3. ராஜாக்கண்ணு .......**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ப.சிங்காரவேலு, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள்/1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இராஜா ஆதிமூலம், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி தோன்றா தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரத்திற்காக தன்னால் தாக்கல் செய்யப்பட்டு, இன்று தனது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி நம்பர் வழக்கில் தன்னால் தாக்கல் செய்யப்பட்ட பிராதில் சொத்து விபரத்தில்

தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது என்றும், இது வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ ஏற்படவில்லை என்றும், பிராதில் ஏற்பட்ட தட்டச்சு பிழையை மன்னித்து மனுவில் உள்ள திருத்தல் விபரப்படி திருத்தம் செய்துகொள்ள தனக்கு அனுமதியளிக்க உத்தரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3-ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனு சுத்தப் பொய்யானதாகும் என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்துவிபரத்தில் தட்டச்சு பிழையாக நான்கெல்லை மாறிவிட்டதாகவும், அதை திருத்தம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு உகந்ததாகும் என்றும், மேற்படி திருத்தல் கோரும் மனுவில் சொல்லப்பட்டுள்ள முகாந்திரங்கள் தவறானதாகும் என்றும், சொத்து விவரத்தையே திருத்துவதால் வழக்கின் போக்கு மாறும் என்றும், மேற்படி தவறும் தட்டச்சு பிழையால் நேர்ந்ததாக தெரியவில்லை என்றும், மனுதாரர்/வாதிக்கு மனுவின் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் மேற்படி மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**6. பிரச்சனைக்கான தீர்வு:-**

மனுதாரர்/வாதியால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாவா சொத்து விபரத்தில் நான்கெல்லையில் திருத்தம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அவரது மனுவில் சொத்து விபரத்தில் தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டுவிட்டதாக கட்சி செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் சொத்து விபரத்தை திருத்துவதால் வழக்கின் போக்கு மாறும் என்றும், திருத்தம் கோரும் மனுவில் சொல்லப்பட்டுள்ள முகாந்திரங்கள் தவறானவை என்றும், மேற்படி தவறு தட்டச்சு பிழையால் நேர்ந்ததாக தெரியவில்லை என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

3) தாவா வழக்கானது தற்போது வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. விசாரணை ஆரம்பித்ததற்கு பிந்தைய திருத்தல் மனுக்களை பொறுத்தவரையில் உரிய கவனத்துடன் இருந்தும், மேற்படி தவறை தவிர்க்க இயலாத சூழ்நிலையில் மட்டுமே அனுமதிக்க முடியும், இந்த மனுவில் நான்கெல்லை விபரம் தட்டச்சு பிழை காரணமாக தவறாக குறிப்பிடப்பட்டது என்ற மனுதாரரின் கட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்று பரிசீலித்து பார்க்கும்போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம், **"Puran Ram Vs. Bhaguram & Anr., on 29th February, 2008"**, என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

"We may now take into consideration as to whether the High Court, in the exercise of its power under Article 227 of the Constitution, was justified in rejecting the application for amendment of the plaint, which, in the discretion of the trial court, was allowed. We are of the view that the High Court ought not to have interfered with the order of the trial court when the order of the trial court was passed on sound consideration of law and facts and when it cannot be said that the order of the trial court was either without jurisdiction or perverse or arbitrary.

15. Before parting with this judgment, we may deal with the submission of the learned counsel for the respondent that the application for amendment could not be allowed in as much as the same was barred by limitation. We are unable to accept this contention of the learned counsel for the respondents. In this regard, we may observe that the court may, in its discretion, allow an application for amendment of the plaint even where the relief sought to be added by amendment is allegedly barred by limitation. This view was also expressed by this Court in Pankaja & Anr. Vs. Yellappa (Dead) by LRs. & Ors. [(2004) 6 SCC 415]. In that decision, it was held that there is no absolute rule that in such a case, the amendment should not be allowed and the discretion of the court in that regard depends on the facts and circumstances of the case and such discretion has to be exercised on a judicious evaluation thereof. It was further held in that decision that an amendment, which subserves the ultimate cause of justice and avoids further litigation, should be allowed. It is well settled by a catena of decisions of this Court that allowing and rejecting an application for amendment of a plaint is really the discretion of the Court and amendment of the plaint also should not be refused on technical grounds. In this connection reliance can be placed on a decision of this Court in Jai Jai Ram Manohar Lal Vs. National Building Material Supply, Gurgaon [AIR 1969 SC 1267]. In paragraph 8 of the said decision this Court observed that "since the name in which the action was instituted was merely a misdescription of the original plaintiff, no question of limitation arises: the

plaint must be deemed on amendment to have been instituted in the name of the real plaintiff on the date on which it was originally instituted. "A reading of this observation would amply clear the position that no question of limitation shall arise when mis-description of the name of the original plaintiff or mis-description of the suit property arose in a particular case. Apart from that in the present case, although, the relief claimed before as well as after the amendment remained the same i.e. a decree for specific performance of the contract for sale, even then, in the facts and circumstances of the present case, as noted herein earlier, we do not find why the High Court should have interfered with the discretion used by the trial court in allowing the application for amendment of the plaint."

4) மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலித்து பார்க்கும்போது சொத்து விபரத்தை திருத்துவது வழக்கின் தன்மையையோ அல்லது காலவரையறை காலத்தையோ மாற்றாது என மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே நீதியின் நலன் கருதி மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் இம்மனுவானது ரூ.1000/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு ரூ.1000/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/-V.சிவகாமசுந்தரி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அறந்தாங்கி.

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்புச் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்புச் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY

Digitally signed by V SIVAGAMASUNDARY
Date: 2023.03.04 17:39:49 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு / செவ்வை உத்தரவு**

**I.A. No. 660/2022**

**O.S.No.136/2018**

**நாள் 04.03.2023.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**